செ.வெ.எண்: 70 **நாள்: 26.01.2017**

புதுக்கோட்டை மாவட்டத்தில் தனியார் இடங்களிலுள்ள சீமைகருவேல மரங்களை அகற்ற பொதுமக்கள் அனைவரும் முன்வர வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப.,அவர்கள் அறிவுறுத்தல்.

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஊராட்சி ஒன்றியம், மண்டையூர் ஊராட்சி, மண்டையூர் கிராமத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (26.01.2017) கிராம சபைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கிராம சபைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

68வது குடியரசு தினவிழாவை முன்னிட்டு நமது மாவட்டத்தில் உள்ள 497 கிராம ஊராட்சிகளில் கிராம சபைக் கூட்டம் நடைபெற்றது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் விராலிமலை ஊராட்சி ஒன்றியம், மண்டையூர் கிராமத்தில் கிராம சபைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கிராமங்களில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்களின் மேம்பாட்டுக்கான திட்டங்கள் மற்றும் ஊராட்சிகளில் அடிப்படை தேவைகளான சுகாதாரம், மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம், பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம் II, அம்மா பூங்கா மற்றும் அம்மா உடற்பயிற்சி கூடம், தாய் திட்டம் 2016-2017, ஊராட்சிப் பகுதிகளில் நடைபெற்றுவரும் பல்வேறு திட்டப் பணிகள் முன்னேற்றம் மற்றும் நிதி செலவினம் குறித்து விவாதிக்கப்பட்டதுடன் பொது வினியோகத்திட்டம், தொழுநோய் இல்லாத கிராமமாக மாற்றுதல், தொழுநோய் ஒழிப்பு உறுதி மொழி எடுத்தல் உள்ளிட்ட பொருட்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

மேலும், தமிழகஅரசு வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் முழு மானியத்தில் சொட்டு நீர்ப்பாசனம் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இதனை அனைத்து விவசாயிகளும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அனைத்து பொதுமக்களும் தங்களது சுகாதாரத்தை பேணும் வகையில் தமிழக அரசின் தனிநபர் இல்லக்கழிவறை கட்டும் திட்டத்தின் கீழ் ரூ.12000 நிதி உதவித்தொகையினை பெற்று தனிநபர் கழிவறை கட்டி பயன்பெறுவதுடன், இப்பகுதியில் உள்ள பொதுமக்களின் அடிப்படை தேவைகளான குடிநீர் வசதி, மின்விளக்கு வசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் நமது மாவட்டத்தில் தனியார் இடங்களில் உள்ள அனைத்து கருவேலமரங்களையும் முழுவதுமாக அகற்ற பொதுமக்கள் அனைவரும் முன்வர வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.சந்தோஷ்குமார், வேளாண்மை இணை இயக்குநர் திரு.அண்ணாமலை, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) (பொ) திரு.முருகண்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.சுப்பிரமணியன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.